Australian Government

COVID-19 VACCINATION

# COVID-19 தடுப்பூசியின் நான்காவது மருந்தளவு

08 ஜூலை 2022

COVID-19 போன்ற சுவாசப்பாதை வைரசுகளால் ஏற்படும் தொற்றுகள் குளிர்-காலத்தில் இன்னும் அதிகமாகப் பெரும்பாலும் ஏற்படும். COVID-19-இற்கு எதிராக மிக அதிகப் பாதுகாப்பினைக் கொடுப்பதற்காக, COVID-19 காரணமாகத் தீவிர நோய்வாய்ப்படுவதற்கான அதியுயர் ஆபத்து உள்ளவர்களுக்குக் கூடுதல் COVID-19 தடுப்பூசி மருந்தளவு ஒன்று, அல்லது COVID-19 தடுப்பூசியின் நான்காவது மருந்தளவு ஒன்று சிபாரிசு செய்யப்படுகிறது. நோயெதிர்ப்புத் திறன் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இது COVID-19 தடுப்பூசியின் ஐந்தாவது மருந்தளவாக இருக்கும்.

பின் வருவன உங்களுக்குப் பொருந்தினால், COVID-19 தடுப்பூசியின் நான்காவது மருந்தளவு ஒன்றை நீங்கள் இட்டுக்கொள்ள வேண்டும்:

- 50 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்
- முதியோர் பராமரிப்பு இல்லம் அல்லது இயலாமையுடையோர் பராமரிப்பு இல்லம் ஒன்றில் வசிப்பவர்

பின் வருவன பொருந்தும் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்குக் கூடுதல் ஊக்க ஊசி ஒன்றும் சிபாரிசு செய்யப்படுகிறது:

- நோயெதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டவர்கள்
- சில புற்று நோய்கள் உள்ளவர்கள், அல்லது சில புற்று நோய்களிலிருந்து உயிர் பிழைத்தவர்கள்
- சிகிச்சை தேவைப்படும் அசாதாரண நோயெதிர்ப்பு முறைமை இயக்க நிலை ஒன்று உள்ளவர்கள்
- நுரையீரல்கள், ஈரல், சிறுநீரகங்கள், மூளை அல்லது இதயம் ஆகியவற்றைப் பாதிக்கும் தீராத அல்லது தீவிர நோய் ஒன்று உள்ளவர்கள்
- மருந்துகள் தேவைப்படும் சர்க்கரை நோய் உள்ளவர்கள்
- குறிப்பிடத்தக்க அல்லது சிக்கலான உடல்நலத் தேவைகளோடு கூடிய இயலாமை ஒன்று உள்ளவர்கள்

- மிகவும் அளவுக்கு அதிகமான உடல் எடை அல்லது மிகவும் குறைந்த உடல் எடை உள்ளவர்கள்.

30 வயது முதல் 49 வயது வரைக்கும் உள்ளவர்களும், அவர்கள் விரும்பினால் நான்காவது மருந்தளவு ஒன்றை இட்டுக்கொள்ளலாம்.

நான்காவது மருந்தளவு ஒன்றை நீங்கள் இட்டுக்கொள்ளவேண்டுமா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

உங்களுடைய ஊக்க ஊசியை நீங்கள் இட்டுக்கொண்டதிலிருந்து குறைந்தது **3 மாதங்கள்** ஆகியிருந்தால், உங்களுடைய COVID-19 தடுப்பூசியின் நான்காவது மருந்தளவினை நீங்கள் இட்டுக்கொள்ளலாம்.

உங்களுடைய 'இன்ஃப்ளுவென்ஸா' தடுப்பூசியை நீங்கள் இட்டுக்கொள்ளும் அதே வேளையில் உங்களுடைய COVID-19 தடுப்பூசியையும் நீங்கள் இட்டுக்கொள்ளலாம்.

சமீபத்தில் உங்களுக்கு COVID-19 இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தால், உங்களுடைய அடுத்த COVID-19 தடுப்பூசி மருந்தளவை நீங்கள் பெறுவதற்கு முன்பு **3 மாதங்க**ளுக்கு நீங்கள் காத்திருக்கவேண்டும் என்று சிபாரிசு செய்யப்படுகிறது.

மேலதிகத் தகவல்களுக்கு www.health.gov.au எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள், அல்லது 1800 020 080-இல் National Coronavirus Helpline-ஐ அழையுங்கள். இலவச மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு 'தெரிவு 8'-ஐ மேற்கொள்ளுங்கள்.